DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 03/2018**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | அஞ்சலாதேவி | Caste: | |
| Husband Name: | கருப்பையா | Calling: | கூலிவேலை |
| Village: | இலந்தைகூட்டம் | Religion: | |
| Taluk: | கீழக்கரை | Age: | 50 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.09.2025

( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் கீழக்கரை தாலுகா இலந்தை கூட்டம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி சித்ராவை தெரியும். சாட்சி ரிஷாந்தினியை தெரியும். சாட்சி ராஜா என் மகன். சாட்சிகள் அசோக்குமார், முனீஸ்வரி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. இறந்துபோன பாண்டியை தெரியாது. இறந்துபோன எதிரி தெய்வேந்திரனை தெரியும். சாட்சி சித்ரா கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்தபோது எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். பாண்டி என்பவர் இறந்தது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை. பாண்டி என்பவர் எப்படி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

தெய்வேந்திரன் மீது பல கொலை கொள்ளை வழக்குகள் இருந்தது எனக்கு தெரியும் என்றும், அதனால் அவர் நீதிமன்றங்களுக்கு சென்றுவருவது எனக்கு தெரியும் என்றும், தெய்வேந்திரன் குடித்துவிட்டு வந்து சித்ராவுடன் சண்டை போடுவார் என்பது தெரியும் என்றும், சித்ராவும் அவரது கணவரும் கொஞ்சகாலம் தர்கா வலசை கிராமத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் சித்ரா வீட்டிற்கு அருகில் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியை சேர்ந்த இறந்துபோன பாண்டி வசித்து வந்தார் என்றும், தெய்வேந்திரன் சித்ராவுடன் அடிக்கடி சண்டை போட்டு வந்ததால் சித்ராவுக்கும் இறந்துபோன பாண்டிக்கும் தொடர்பு ஏற்பட்டது என்றும், அதனால் தெய்வேந்திரன் சித்ராவையும் பாண்டியையும் கண்டித்தார் என்றும், அதனால் சித்ராவும் பாண்டியும் தர்காவலசையில் இருந்து ஓடிப்போய் கோவிலில் தாலி கட்டி திண்டுக்கலில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், அதன்பிறகு கீழக்கரை தாலுகா காஞ்சிரங்குடி செங்கல் நீரோடையில் உள்ள மூர் டிராவல்ஸ்க்கு சொந்தமான தோப்பில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், 12.05.2017 க்கு ஒரு வாரத்திற்கு முன்பு தெய்வேந்திரன் சித்ராவும் பாண்டியும் வாழ்ந்து வந்த தோப்பிற்கு வந்து சித்ராவிடம் தகராறு செய்தார் என்றும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சத்தம் போட்டதால் தெய்வேந்திரன் போய்விட்டார் என்றும், அதனால் அங்கிருந்து கிளம்பி கீழக்கரையிலிருந்து முள்ளுவாடி செல்லும் ரோட்டில் மௌலானா என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் என் அக்கா மகனான அசோக்குமார் வேலை பார்த்து வந்த இடத்தில் சித்ராவும் பாண்டியும் அடைக்கலமாக இருந்தார்கள் என்றும், 12.05.2017 ம் தேதி சித்ராவும் பாண்டியும் மேற்படி தோட்டத்தில் அசோக்குமார் குடிசை

வீட்டிற்கு முன்பு உள்ள இடத்தில் மணலில் போர்வையை விரித்து படுத்திருந்தார்கள் என்றும், சித்ரா உள்ளே படுத்திருந்தார், பாண்டி வெளியே படுத்திருந்தார் என்றும், அந்த சமயத்தில் நானும் அசோக்குமாரின் குழந்தைகளும் அங்கு இருந்தோம் என்றும், அன்று இரவு 2.00 மணியளவில் வெளியில் படுத்திருந்த பாண்டியின் அலறல் சத்தம் கேட்டது என்றும், குடிசை வீட்டு முன்பு உள்ள கம்பத்தில் விளக்கு எரிந்துகொண்டிருந்ததால் வெளிச்சம் இருந்தது என்றும், அதனால் பாண்டி படுத்திருந்த இடத்தில் நடக்கும் விசயங்களை வீட்டிற்குள் இருந்து பார்க்க முடியும் என்றும், வெளிச்சம் இருந்ததால் வெளியில் நடக்கும் விசயங்கள் தெரியும் என்றும், பாண்டியின் அலறல் சத்தம் கேட்டவுடன் சித்ரா வெளியில் வந்து பார்த்தார் என்றும், சித்ரா பார்க்கும்போது தெய்வேந்திரன் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எந்திரிக்க விடாமல் மிதித்து கொண்டிருந்தார் என்றும், ஆனால் தெய்வேந்திரன் ஓடும்போது பார்த்தார் என்றும், தெய்வேந்திரன் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எழுந்திரிக்க விடாமல் மிதித்துகொண்டிருந்ததை நானும் சித்ராவும் பார்த்தோம் என்றும் தற்போது இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது சித்ராவின் கணவர் தெய்வேந்திரன் பாட்டிலில் இருந்த மண்ணெண்ணெயை பாண்டி மீது ஊற்றினார் என்றும், அதையும் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் அதை பார்த்துவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது இன்னொருவர் பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தார் என்றும், அதையும் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தவர் சித்ராவின் கணவரின் நண்பரான நீதிமன்றத்தில் உள்ள ராஜா

என்ற ஊசி மண்டையன் என்பது எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரியை சம்பவத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றும் சொன்னால் அவ்வாறு போலிசார் சொல்ல சொன்னார்கள். பாண்டி திமிறி எழுந்திருக்கும்போது சித்ராவின் கணவர் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குச்சியை பற்றவைத்து போட்டுவிட்டார் என்றும் அதையும் நான் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. சித்ராவின் கணவர் அத்துடன் தேவுடியா பயலே உனக்கு மறவ வீட்டு பொன்னு கேட்டுகுதாடா இத்தோடு செத்து தொலடா என்று சொல்லி பேசினார் என்றும் அதையும் நான் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அப்படி பேசிகொண்டு ஆஜர் எதிரியிடம் இருந்த கம்பியை வாங்கி சித்ராவையும் அடிக்க பாய்ந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி பொம்பளயை அடிக்க வேண்டாம் என்று சொல்லி தடுத்து சித்ராவின் கணவர் தெய்வேந்திரனை கூட்டி சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. நான், அசோக்குமாரின் குழந்தைகளான ரிஷாந்தினி, ரீத்தா ஆகியோர்கள் சத்தம் கேட்டு வந்தார்கள் என்றும் அவர்கள் சத்தம் போட்டவுடன் சித்ராவின் கணவரும் ஆஜர் எதிரியும் கம்பியுடனும் பாட்டிலுடனும் ஓடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பாண்டியின் உடல் முழுவதும் தீப்பற்றி அவர் வலிதாங்கமுடியாமல் அலறினார் என்றால் இல்லை. அப்போது நான், சித்ரா, ரிஷாந்தினி, ரீத்தா ஆகியோர்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சரியல்ல, கடந்த 12.05.2017 ம் தேதி காலை 8.40 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றால் தெரியாது. மேற்படி விவரங்களை 12.05.2017 ம் தேதி டிஎஸ்பி என்னை

விசாரிக்கும்போது கூறிவிட்டு ஆஜர் எதிரி சித்ராவின் கணவரின் நண்பர் என்பதாலும் பாண்டி இறந்துவிட்டதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 03/2018**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ரிஷாந்தினி | Caste: | |
| Father's Name: | அசோக்குமார் | Calling: | |
| Village: | திருப்புல்லாணி | Religion: | |
| Taluk: | கீழக்கரை | Age: | 23 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.09.2025

( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**முதன்மை விசாரணை**

நான் கீழக்கரை தாலுகா திருப்புல்லாணியில் தற்போது வசித்து வருகிறேன். சாட்சி சித்ராவை தெரியும். அவர் என் அத்தை. சாட்சி அஞ்சலாதேவி என் அப்பத்தா, சாட்சி அசோக்குமார் என் அப்பா, ரீத்தா என் தங்கை, சாட்சி முனீஸ்வரி என் அம்மா. இறந்துபோன பாண்டியை தெரியும். இறந்துபோன எதிரி தெய்வேந்திரனை தெரியும் . என் மாமா. ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 சித்ரா கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. பாண்டி எப்படி இறந்தார் என்பது எனக்கு தெரியாது. அவர் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 12.05.2017 ம் தேதி என் அத்தை சித்ராவும் பாண்டியும் நாங்கள் வசித்து வந்த தோட்டத்தில் எங்கள் வீட்டு குடிசைக்கு முன்பு உள்ள இடத்தில் மணலில் போர்வையை விரித்து படுத்திருந்தார்கள் என்றும், நானும் என் பாட்டி அஞ்சலாதேவியும் உள்ளே படுத்திருந்தோம் என்றும், அன்று இரவு 2.00 மணியளவில் வெளியில் படுத்திருந்த பாண்டியின் அலறல் சத்தம் கேட்டது என்றும், குடிசை வீட்டு முன்பு உள்ள கம்பத்தில் விளக்கு எரிந்துகொண்டிருந்ததால் வெளிச்சம் இருந்தது என்றும், அதனால் பாண்டி படுத்திருந்த இடத்தில் நடக்கும் விசயங்களை வீட்டிற்குள் இருந்து பார்க்க முடியும் என்றும், வெளிச்சம் இருந்ததால் வெளியில் நடக்கும் விசயங்கள் தெரியும் என்றும், பாண்டியின் அலறல் சத்தம் கேட்டவுடன் என் அத்தை சித்ரா வெளியில் வந்து பார்த்தார் என்றும், சித்ரா பார்க்கும்போது தெய்வேந்திரன் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எந்திரிக்க விடாமல் மிதித்து கொண்டிருந்தார் என்றும், ஆனால் தெய்வேந்திரன் ஓடும்போது பார்த்தார் என்றும், தெய்வேந்திரன் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எழுந்திரிக்க விடாமல் மிதித்துகொண்டிருந்ததை நானும் பாட்டி அஞ்சலாதேவியும், அத்தை சித்ராவும் பார்த்தோம் என்றும், அப்போது என் மாமா தெய்வேந்திரன் பாட்டிலில் இருந்த மண்ணெண்ணெயை பாண்டி மீது ஊற்றினார் என்றும், அப்போது இன்னொருவர் பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தார் என்றும், பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தவர் என் அத்தையின் கணவரின் நண்பரான நீதிமன்றத்தில் உள்ள ராஜா என்ற ஊசி மண்டையன் என்பது எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரியை

சம்பவத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றும், பாண்டி திமிறி எழுந்திருக்கும்போது சித்ராவின் கணவர் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குச்சியை பற்றவைத்து போட்டுவிட்டார் என்றும் அதையும் நானும் பாட்டி அஞ்சலாதேவி, அத்தை சித்ரா ஆகியோர் பார்த்தோம் என்றும், எனது மாமா தெய்வேந்திரன் தேவுடியா பயலே உனக்கு மறவ வீட்டு பொன்னு கேட்டுகுதாடா இத்தோடு செத்து தொலடா என்று சொல்லி பேசினார் என்றும் அதையும் நாங்கள் கேட்டோம் என்றும், அப்படி பேசிகொண்டு ஆஜர் எதிரியிடம் இருந்த கம்பியை வாங்கி என் அத்தை சித்ராவையும் என் மாமா அடிக்க பாய்ந்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரி பொம்பளயை அடிக்க வேண்டாம் என்று சொல்லி தடுத்து என் அத்தை சித்ராவின் கணவர் தெய்வேந்திரனை கூட்டி சென்றுவிட்டார் என்றும் , நான், என் அத்தை சித்ரா, பாட்டி, ரீத்தா ஆகியோர்கள் சத்தம் கேட்டு வந்தார்கள் என்றும் அவர்கள் சத்தம் போட்டவுடன் என் அத்தை சித்ராவின் கணவரும் ஆஜர் எதிரியும் கம்பியுடனும் பாட்டிலுடனும் ஓடிவிட்டார்கள் என்றும், பாண்டியின் உடல் முழுவதும் தீப்பற்றி அவர் வலிதாங்கமுடியாமல் அலறினார் என்றும், அப்போது நான், சித்ரா, என் பாட்டி, ரீத்தா ஆகியோர்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தோம் என்றும், அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், கடந்த 12.05.2017 ம் தேதி காலை 8.40 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், மேற்படி விவரங்களை 12.05.2017 ம் தேதி டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போதும் பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் 164 குவிமுச வாக்குமூலம் அளித்தபோது சொல்லிவிட்டு ஆஜர் எதிரி என் மாமாவின் நண்பர் என்பதாலும் பாண்டி

இறந்துவிட்டதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏழு வருடங்களுக்கு முன்பு நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தேனா என்றால் பரமக்குடி நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள 17 கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த வாக்குமூலத்தை போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேனா இல்லை நானாக சொன்னேனா என்றால் நானாக சொன்னேன். பரமக்குடி நீதிமன்றத்தில் சொன்ன வாக்குமூலங்கள் அனைத்தும் உண்மைதான். பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குவிமுச 164 ன் கீழ் அளித்த வாக்குமூலம் **அ.சா.ஆ.2.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)